


மேகக் கோட்டை
மர்மம்!
னல் படையினர்
சாகஸம்!
லயன்
காமிக்ஸ்
ப்ளஸ்
கேப்டன் பிரின்ஸ்
சிறு கதை!

லயன் காமிக்ஸ்
வெளியீடு நெ: 125




வாசக நண்பர்களே,

வணக்கம். நீண்ட நாட்களுக்குப் பிறகு நமது மின்னல் படையினர் உங்களை சந்திக்க வந்துள்ளனர்! ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் நடைபெறும் இந்த **"மேகக் கோட்டை மர்மம்"** ஒரு **high - speed** த்ரில்லர்! படித்து விட்டு - அதே வேகத்தில் கதையைப் பற்றிய கருத்துக்களையும் தெரிவித்திட வேண்டுகிறேன். அது தவிர - இந்த இதழில் **கேப்டன் பிரின்ஸின்** ஒரு குட்டிக் கதையும் உண்டு! கரடுமுரடான கப்பல் கேப்டனாகும் முன்னர் - பிரின்ஸ் ஒரு சர்வதேச துப்பறிவாளராக இருந்தது உங்களுக்குத் தெரியாத சங்கதி! அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற குட்டி சாகஸம் தான் **"இருளின் சாம்ராஜ்யம்!"**

அப்புறம் - இந்த இதழிலிருந்து இரு புதிய பகுதிகள் துவங்குகின்றன!

முதலாவது - **"மாதம் ஒரு முகவர்!"** பின்னணியிலிருந்து கொண்டே - நமது லயனை ஒரு முன்னணிப் பத்திரிகையாக நிலைக்கச் செய்து வரும் நமது விற்பனையாள நண்பர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்திடவே இந்தப் பகுதி!

இரண்டாவது - **"லயன் வாசகர் வட்டம்"!** பேனா நண்பர்கள் பகுதியைச் சேர்த்திட வேண்டுமென்ற உங்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்தப் பகுதி!

சென்ற மாத இதழான மாடஸ்டியின் **"புலி வருது"** சற்றே தாமதமாய் வெளியானதாலும் இந்தப் பகுதியை நான் சற்றே சீக்கிரமாய் எழுதுவதாலும் review செய்திட இயலவில்லை. உங்கள் கருத்துக் கடிதங்கள் முழுவதும் வந்த பின்னர் - அடுத்த இதழில் எழுதுகிறேன்!

அடுத்த வெளியீடு - **"லயன் தீபாவளி மலர்!"** பல மாதங்களாய் விளம்பரப்படுத்தி வரும் டெக்ஸ் குழுவின் **"நள்ளிரவு வேட்டை"** சூப்பராய் தயாராகி வருகிறது! அட்டகாசமான இரு அட்டைப்படங்கள் இதழின் high light! படிக்கத் தவறாதீர்கள்!

டிசம்பரில் பிரின்ஸ் கதை வருவதில் தாமதம் ஏற்படும் போலத் தெரிவதால் - லக்கி லூக்கின் **ஒரு கோச் வண்டியின் கதை"** அல்லது - புதியதொரு காமெடி கதை வரும்! அடுத்த இதழில் உறுதிப்படுத்துகிறேன்!

இது நமது **லயனின் 125-வது வெளியீடு!** 1984-ல் துவங்கிய நமது காமிக்ஸ் பயணத்தில் latest ஆன்தொரு மைல் கல் இது! 'Miles to so - before I sleep' என்று பிரசித்தி பெற்ற ஆங்கில கவிஞர் (கீட்ஸ்? ஷெல்லி?) சொன்னது போல நமது பயணம் இன்னும் நிறையத் தொட வேண்டியுள்ளது! அதற்கு ஆண்டவனின் ஆசி கோரி விண்ணப்பம் போட்டு வைப்போமே?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை - happy reading!

அன்புடன்
**S. விஜயன்**

பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 72649.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி 626 123.

# "மாதம் ஒரு முகவர்"



பெயர் ... — எம். நவநீதகிருஷ்ணன் வயது : 35

முகவரி ... — நியூஸ் ஏஜெண்ட், நிருபர், திங்கள் சந்தை

சொந்தமாக புத்தகக்கடை உள்ளதா அல்லது கடைகளில் விநியோகம் செய்வது மட்டும்தானா? — ஆம்.

லயன்/முத்து காமிக்ஸ் விற்பனையாளராக இருப்பது எவ்வளவு காலமாய்? — சுமார் 5 ஆண்டு

இதர ஏஜென்சிகள் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு? — தினமலர், தினமணி, தினத்தந்தி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மலையாள மனோரமா, மாத்ரு பூமி, கதிரவன், தினகரன் மற்றும் HINDU மற்றும் வார இதழ்கள்

இதழ்களின் நிறைகள் என்று நீங்கள் நினைப்பது என்ன? — சொல்ல முடியாத அளவு

குறைகள் .... — இல்லை

விற்பனை உயர்விற்கு என்ன பண்ணலாம்? — இங்கு ராணி காமிக்ஸ் 3.ரூ விலைக்கு விற்கப்படுகிறது. நமது முத்து, லயன் 4,5,6, என விற்கப்படுகிறது விலை குறைந்த பேப்பரில் போட்டு ப்ளாக் & ஒயிட் போடலாம் அல்லது இதனை அப்படியே வெளியிட்டு மாற்று ஒரு பெயரில் குறைந்த விலையில் வெளியிட்டு விற்பனை வளர்ச்சி முயற்சி எடுக்கலாம்.

மின்னல் படையினர் சாகஸம்!

## ஹிட்லரின்

# மேகக் கோட்டை மர்மம்




இல்லை என்பதாக தலையை ஆட்டிய ஜெனரல் வரைபடத்தில் ஓரிடத்தை சுட்டிக் காட்டினார்...
அந்தக் கோட்டை நிஜமாகவே இங்கே இருக்கிறது!
தற்போது சிறு ஜெர்மன் படைப் பிரிவின் பாதுகாப்பில் அது இருந்து வருகிறது... கோட்டையை தாக்கி, கைப்பற்றி அதிரடிப்படை அங்கே வந்து அதை அழித்து நிர்மூலமாக்கும் வரை தங்கள் வசம் வைத்திருக்க முடியும் என்று செய்தியனுப்பியிருக்கிறது. நம் தோழமை படைப்பிரிவு ஒன்று.
பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்... நீ தோல்வியுற்றால் நாஜிகள் பலம் பெற்று வரும் அநியாயத்துக்கு ஒரு முடிவே இல்லாது போய்விடலாம்!
தேவையான நடவடிக்கைகளை டனடியாக மேற்கொள்ளுகிறேன்... ஜெனரல்!
வெளியேறி வந்தவர் தன் சகா ஜான் ஸ்மித்தோடு ஜீப்பில் விரைந்தார்...
வேகம் போதாது ஜான்... இன்னும் நான்கு மணி நேரத்தில் ஆஸ்திரியாவின் வடஎல்லையில் ஒரு இத்தாலிய படைப்பிரிவை நாம் சந்திக்க வேண்டும்.
அஸ்தமன வேளையில் இத்தாலியின் வடபகுதியிலிருந்த ஒரு விமான தளத்திலிருந்து காப்டன் மாட், மாத்யூஸோடு அவருடைய சகாக்களான ஜான் ஸ்மித், ஜூல்ஸ், கார்ஸியூ மற்றும் மிக் பால்ஸ்கியையும் சுமந்து கொண்டு புறப்பட்டது ஒரு டயோடா விமானம்.
கூட்டமாக போனால் பிறரது கவனத்தை ஈர்த்து விடுமாதலால் மூன்று பேரோடு போனால் போதும் என்று ஜெனரல் சொல்லிவிட்டார்.
அப்படியானால் ஜானை ஏன் கூட்டி வந்தீர்கள்? இந்தக் குண்டனை எப்படி பிறர் பார்வையில் படாமல் மறைப்பது?


மும்முரமாக சண்டை நடந்து கொண்டிருந்த பிராந்தியத்தினூடே நைச்சியமாக முன்னேறிச் சென்றது அந்தச் சிறு விமானம்.
கீழே ஒரே அமளியாக கிடக்கிறது...
ஜெர்மானியர்கள் லேசில் ஓய்வதாகத் தெரியவில்லை... இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகிறதோ இந்த யுத்தம்
ரங்கிகளின் முழக்கம் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது...
பனிப்பொழிவு தீவிரமடையலாம் என்கிறது வானிலை ஆய்வறிக்கை... ிரரது பார்வையில் படாமல் தரையிறங்க பாதுமான பனிப்பொழிவு இருந்தால் நம் அதிர்ஷ்டம்!
லக்கை நெருங்கியதும் அந்த விமானம் தாடர்ந்து தாழப்பறந்தது. முடிவில் - ஒரு ண்ணை வீட்டிலிருந்து ப்ளாஷ் விளக்கு ன்று வானை நோக்கி கண் சிமிட்டியது.
இதுதான் நாம் இறங்க வேண்டிய இடம்
பாரசூட்டை கட்டிக் கொள்ளுங்கள்


டும் குளிர் காற்றை கிழித்துக் கொண்டு
கீழே இறங்கினார்கள் அந்நால்வரும்!
ரையில் சற்றுத் தள்ளி நிழல் உருவமாக
ஒருநபர் நின்று கொண்டிருந்தார்...
ஒற்றை நபர் வரவேற்புக் குழுவோ!
டன் மாத்யூஸ்... நான் யுகோ ராஸ்!
இங்குள்ள படைப்பிரிவின் லீடர்
உன்னைப் பற்றி நிறைய
கேள்விப்பட்டிருக்கிறேன் யுகோ...
பண்ணை வீட்டை நோக்கி அனைவரும்
நடந்தனர்...
அந்தக் கோட்டை சற்றுத் தொலைவில்
இருக்கிறது... பனியில் நீண்ட பயணம்
நமக்கு காத்திருக்கிறது...
பனிச் சறுக்கு கட்டைகள் இருக்கின்றன
அல்லவா?
பனிச் சறுக்கு ஜானுக்கு ஒத்து வராதே -
அவனை இங்கேயே விட்டுவிட்டுப்
போகிறோமா?



நண்பனின் கிண்டலைக் கேட்டு உறுமினான் ஜான்...
ஸ்காட்லாண்டில் இருந்த போது பனிச்சறுக்கு பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பது தெரியாமல் பேசுகிறாயே!
ஆனாலும் அரிச்சுவடிதானே கற்றுக் கொண்டிருப்பாய்? எங்களைப் போன்ற எக்ஸ்பர்ட்டுகளுக்கு ஈடுகொடுத்து உன்னால் வரமுடியுமா என்ன?
தன் படைவீரர்கள் ஏற்கனவே கோட்டையை பிடித்து விட்டதாக யுகோ தெரிவித்தான்...
கோட்டையில் இருந்த ஜெர்மானியர்கள் வெறும் டெக்னீஷியர்கள் தான்... என் வீரர்கள் நூறு பேரும் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள். எனவே சுலபமாக கோட்டையை பிடித்துவிட்டார்கள். ஆனால் ஜெர்மானிய படைப்பிரிவு ஒன்று அருகாமையிலேயே இருப்பதாக தகவல்! செய்தி அவர்களை எட்டியதோ நமக்கு தொல்லை வந்து சேருவது உறுதி.
அப்படியானால் ஜெர்மானியர்கள் தாக்கத் தொடங்கு முன் நாம் அங்கே சென்றடைந்து விடவேண்டும். கோட்டையை நாம் அழிக்கத் தவறினால் இந்த யுத்தம் பல்லாண்டுகளுக்கு நீடித்து விடும்.
வைகறைப் பொழுதில் அவர்கள் பயணத்தை தொடங்கினர்
எல்லாமே சாதகமாக அமைந்து விட்டால் இரவில் நாம் இலக்கை எட்டிவிடலாம்
சரி... புறப்படுங்கள்!


மற்றவர்களை பின் தொடர முயன்ற ஜான் நிலை குலைந்து கீழே விழுந்தான்...
என்னவோ பெரிதாக பீற்றிக் கொண்டாயே..
கிண்டல் வேண்டாம்...தூக்கி விடு என்னை
நல்லவேளையாக போகப்போக ஜான் தேறிவிட்டான்
ஜுல்ஸ் .. கற்றுக் கொடுப்பதில் வல்லவன் நீ!
நடக்கப் பழகிய நாளிலிருந்தே பனிச் சறுக்கு கற்றுக் கொண்டவனாக்கும் நான்!
நன்றாக தேறிவிட்டதான நினைப்பில் மற்றவர்களை முந்திக் கொண்டு போகும் முயற்சியில் இறங்கினான் ஜான்
அங்கேயே என்னை விட்டு வரவேண்டும் என்று சொன்னாயே - வார்த்தைகளை வாபஸ் வாங்கிக் கொள்கிறாயா?
நிதானமாகப் போ ஜான்... இங்கே விபரீதமான சில சரிவுகள் இருப்பதாக யுகோ சொல்கிறான்
ஆனால் அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்துவிட்டு வேகமாக கீழே இறங்கத் தொடங்கினான்
ஜான்... நில்... நில்...



எவ்வளவோ முயன்றும் ஜானினால் வேகத்தை கட்டுப்படுத்தவே முடியவில்லை...
ஐயோ... பெரும் பள்ளம்... காப்பாற்றுங்கள்
மறுகணம் முகட்டின் முனையை தாண்டி காற்றில் பறந்தான் ஜான்...
தொலைந்தேன்!
எதிரே குவியலாக கிடந்த பனியில் போய் விழுந்து உருண்டான் ஜான்
ஆண்டவனே... ன்னை காப்பாற்று




தன் நண்பனை பின் தொடர்ந்து வந்த ஜூல்ஸும் முகட்டிலிருந்து பாய்ந்தான் - ஆனால் ஒரு நிபுணனின் சாகஸத்தோடு...
நல்லவேளை - பாறையில் மோதிக் கொள்ளாமல் பனிக் குவியலின் மீது போய் விழுந்து தொலைத்தான்!
லாவகமாக தரையிறங்கி உறுதியாக நிலை கொண்டான் ஜூல்ஸ்
அப்பா... தெனாவட்டுத் திலகம் -
மற்ற மூவரும் வந்து ஜூல்ஸோடுசேர்ந்து ஜானை பனிக்குவியலிலிருந்து தோண்டி எடுத்தார்கள்
உடம்பு எப்படி இருக்கிறது! ஹா! ஹா!
அதன் பின்னர் இருள் கவிழும் வரை வேறு குறிப்பிடும்படியாக எந்த சம்பவமும் நிகழவில்லை...
ஜான்... கொஞ்சம் நிதானமாகவே நடந்துகொள்
காப்டன் - எதிரே...நாஜி கண்காணிப்புக் குழு!
நம்மை அவர்கள் பார்த்துவிட்ட மாதிரி தெரிகிறது!


மோதல் தவிர்க்க முடியாததாகிவிட்டது... இரகசிய கோட்டை அருகே தாங்கள் இருப்பதை தெரிந்து கொண்டுவிட்ட எவரையும் சாட்சிகளாக விட்டு வைக்க முடியாத நிலை...
விலகிப் போய்விட வேண்டியதுதானே - காப்டன்?
பிரிட்டிஷ் படையினர் - இங்கே அவர்களுக்கு என்ன வேலை - சுடுங்கள்!
அவர்களை சரியாக குறிவைக்க ஏதுவாக இல்லை காப்டன்
டுமீல்! டுமீல்!
கமாண்டோக்களை சுற்றிலும் தோட்டாக்கள் பனிப் பரப்பை முத்தமிட்டுச் சிதறின...
திருப்பி தாக்குங்கள் தோழர்களே...


ஆஆஆ
ரட்-டட்-டட்!
எதிரிகளுக்கு சற்றுத் தொலைவிலேயே நின்று கொண்டு விட்டார்கள் - மாத்யூஸ் ஜூல்ஸ், மிக் மூவரும். ஆனால் ஜானுக்கு அது சாத்தியப்படவில்லை...
வோம்ப்ப்...!
ஆஆக்க்...!
மடோ!


மீண்டும் இசகு பிசகாக விழுந்து விட்ட ஜானை ஜூல்ஸ்தான் தூக்கிவிட்டான்...
சரியான கோமாளியாக இருக்கிறாயே... உடம்பு இருக்கிற அளவுக்கு மண்டைக்குள்ளே மசாலா காணாது...
ஜான் மோதி தள்ளிய ஜெர்மானியன் குப்புற விழுந்து கிடந்தான்...
மற்றவர்களைப் போலவே இவனும் வைகுண்டம் போய்விட்டான்... தடுமா சரிந்ததில் தன்னுடைய கத்தியின் மீ விழுந்து விட்டான்...!
அந்தச் சிறிய படை தொடர்ந்து முன்னேறியது... நேரம் செல்லச் செல்ல பனிப்பொழிவும் அதிகரித்து துன்புறுத்தியது.
டும்! டமால்!
இந்த மோசமான சூழ்நிலையில் ஜெர்மானியர்கள் வெளியே வரமாட்டார்கள் என்பது சாதகமான அம்சம்...
காப்டன்... அதென்ன சப்தம் இடிமுழக்கம்போல்?


அது இடி முழக்கம் அல்ல என்பது நொடியில் விளங்கிவிட்டது.
துப்பாக்கிச் சூடு நடக்கிறது... இரகசிய கோட்டை இருக்கும்; திசையிலிருந்து கேட்கிறது... ஜெர்மானியர்கள் ஏற்கனவே தாக்குதலை தொடங்கிவிட்டார்கள் போலிருக்கிறது
நாம் தாமதித்து விட்டோம் என்றாகிறது யுகோ! கோட்டைக்குள் இனி நாம் எப்படி போய்ச் சேருவது?
பல மைல்களுக்கு அப்பால் - இரகசிய கோட்டையை மீட்டு வசப்படுத்த வேண்டும் என்ற மேலிடத்து உத்தரவின் பேரில் வந்து சேர்ந்த ஜெர்மானியப் படைப் பிரிவு கோட்டையை நெருங்க முடியாமல் திணறியது...
மார்ட்டர் பீரங்கி தாக்குதல் - நம்மால் சமாளிக்க இயலுமா ஆல்பர்ட்டோ?
அம்மாதிரியான தாக்குதல்களுக்கெல்லாம் ஈடு கொடுக்கும் வகையில் கட்டப்பட்ட உறுதியான கோட்டை இது... பிரிட்டிஷ் படைப் பிரிவோடு யுகோ சீக்கிரம் திரும்பி வந்து சேர்ந்தால் நல்லது... எண்ணிக்கையில் எதிரிகள் அதிகமாக இருப்பது அச்சுறுத்துகிறது
சற்றுத் தள்ளி ஜெர்மானிய கர்னல் எக்கர் நிலைமையை விவாதித்துக் கொண்டிருந்தார்.
மார்ட்டர் பீரங்கி தாக்குதல் பிரயோஜனப்படாது காப்டன்
எப்படியாவது கோட்டையை பிடித்தாக வேண்டுமே... நேசப் படைகள் மெர்லினின் புறநகர் பகுதிக்கு வந்தாயிற்று. எனவே, தலைவரின் அணி எந்த நேரமும் இங்கே வந்து சேரலாம்.


இன்னவிதமாக தாக்குதலை தொடர்ந்து நடத்துங்கள் என்று தன் வீரர்களை பணித்துவிட்டு, தற்காலிக தலைமையகமாக வைத்துக் கொண்டிருக்கும் ஒரு பழைய கட்டிடத்திற்கு போனார் எக்கர்...
கூடுதல் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் கோரி செய்தியனுப்ப வேண்டும்.
அப்போது ஐந்து நபர்கள் அவ்வழியாக சறுக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்...
மார்ட்டர் பீரங்கியை இயக்கும் ஆட்கள் மேட்டில் தென்படுகிறார்கள் - இல்லையா கேப்டன்?
நாம் மேலே முன்னேறினால் அவர்கள் நம்மை பார்த்து விடுவார்கள்.
சுற்றிக் கொண்டு மாற்றுப் பாதையில் செல்வது என தீர்மானிக்கப்பட்டது...
இருட்டும், பனிப்பொழிவும் தான் நம் சீருடையை பிறர் கவனித்து விடாமல் காக்க வேண்டும். ஆனால் நிலா பால்போல் காய்கிறது...
மாத்யூஸிற்கு திடீரென்று ஒரு யோசனை உதித்தது... அதன்படி திரும்பி பழைய கட்டிடத்தை நோக்கி நகர்ந்தனர்...
ஜுல்ஸ்... போய் கதவை தட்டு - ஆனால் நீ எதற்கும் தயாராக இருக்க வேண்டும்! மேலே புகை வருவதை கவனித்தேன் - உள்ளே நிச்சயம் யாரோ இருக்கிறார்கள்


தீ மூட்டி கதகதப்பில் இதம் கண்டு கொண்டிருந்த எக்கர் கதவை யாரோ தட்டுவது கேட்டு திரும்பினார்...
யாரது... கேப்டன் க்ளிங்கரா? க்ளிங்கர்?
பதில் வராது போகவே பொறுமையிழந்த கர்னல் போய் கதவை திறந்தார்... மறுகணம் இடியென ஒரு குத்து அவருடைய முகரையில் விழுந்தது...
முறைப்படி அறிமுகம் செய்து கொள்ள அவகாசம் இல்லாது போயிற்று... ஸாரி!
கும்!
நிலை தடுமாறி பின்னுக்கு நகர்ந்த கர்னல் காஸ் அடுப்பினுள் விழுந்தார்.
ஆனாலும் இது ரொம்பக் கொடுமை - ஜுல்ஸ்!


குய்யோ முய்யோ என்று அலறிக் கொண்டு துள்ளி எழுந்தார் கர்னல்...
ஆஆ... ஐயோ...
ஓ... போதாதா - இந்தா... இன்னொன்று! இது உன் வேதனையை தற்காலிகமாக மறக்கச் செய்யும்!
வெட்டுண்ட மரம் போல் தரையில் சாய்ந்த கர்னலின் மீது தண்ணீரை ஊற்றி ஆடையில் பற்றிப் புகைந்து கொண்டிருந்த தீயை அணைத்தார்கள்.
ஒருவனாகவே தூள் கிளப்பிவிட்டாய் ஜுல்ஸ் - வேறு எவராவது உள்ளே இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். மாடி அறையில் நமக்கு தேவைப்படும் பொருள் கிடைக்குமா என்றும் தேடவேண்டும்...
சற்றைக்கெல்லாம் வித்தியாசமான ஆடையலங்காரத்தோடு மாடி அறையை விட்டு ஐவரும் கீழிறங்கினர்...
நம் சீருடையை மறைக்க இந்த மேலங்கியை அணிந்து கொண்டிருக்கிறோமே... ஜெர்மானியர்களுக்கு சந்தேகம் வராதா என்ன?
சிக்கலான கேள்வி - அதனால்தான் சொல்கிறேன் எல்லோரும் எப்போதும் ஆயுதங்களை தயார் நிலையில் வைத்திருங்கள் என்று!



ஜெர்மானிய பதுங்கு குழிகளை தாண்டி அவர்கள் முன்னேறிய வேளையில் பனிப்பொழிவு ஓய்ந்து போயிருந்தது.
இம்மாதிரி அங்கி அணிந்துகொண்டு எங்கே போகிறீர்கள் காம்ரேட்?
வேவு பார்க்க போய்க் கொண்டிருக்கிறோம்... பனிப்பரப்பில் இந்த ஆடை பிறர் கவனத்தை ஈர்க்காதிருக்க உதவுமில்லையா?
இந்த வெள்ளை ஆடை ங்கே கிடைத்தது உங்களுக்கு?
இது நாங்களாகவே தயாரித்தது... பெட்ஷீட்டைத்தான் உருமாற்றியிருக்கிறோம்
முன்னிலை படை பிரிவையும் தாண்டி சரிவில் சிரமப்பட்டு மேலே ஏறினார்கள்...
டூம்!
சண்டை நிகழும் இடத்தை நெருங்குவது விவேகமாகாது... ஜெர்மானியர்கள் ஓயும் வரை நாம் காத்திருப்போம்
ஆனால் ஜெர்மானியர்கள் ஓய்வதாக இல்லை...
டூம்!
காப்டன்... ஜெர்மானிய காலாட்படை சரிவின் கீழே நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் - என்ன செய்யப் போகிறோம்?


நாஜிகள் நெருங்கி விட்டார்கள்
யார்... அவர்கள்?
வேவுப்படையினர்! நாம் சண்டைபோடும் வேளையில் நிலைமையை ஆராய வந்திருப்பார்கள் போல் தோன்றுகிறது
அந்த நாஜி லெப்டினென்ட் அவர்களை நோக்கி கத்தினான்
சண்டைபோட பயந்து இப்படி சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறோம் என்பதாக அவன் சந்தேகிக்கிற மாதிரி தோன்றுகிறது... மரியாதையாக எழுந்து நடப்பதுதான் விவேகம்
மாத்யூஸ் எழுந்து நடந்ததை தொடர்ந்து நண்பர்களும் நடந்தார்கள். சண்டையில் பங்கேற்க வேண்டிய நெருக்கடி - அல்லது அப்படி நடிக்கவாவது செய்ய வேண்டும்
தொடைநடுங்கி சோதாக்கள் - நடங்களடா!
முன்னால் போகச் சொல்கிறான்... குண்டடிபட்டு செத்து விழுவது முதலில் நாங்களாகத்தானிருக்கும்



குண்டின் சிதறல்கள் தலைக்கு மேலே சீறிக்கொண்டு செல்லுகிற நெருக்கத்தில் போய்விட்டார்கள்
நில்லுங்கள்!
அப்பாடா... இப்போதாவது சொன்னானே!
பீரங்கித் தாக்குதல் ஓய்வதற்காக காத்திருந்தார்கள்
அது ஓய்ந்தவுடன் நாமும் போய் நேரடியாக மோதலில் கலந்து கொள்கிறோம்...
டூம்! டூம்!
சற்றைக்கெல்லாம் தாக்குதல் ஓய்ந்து போனது - முன்னேற உத்தரவிட்டான் லெப்டினென்ட்...
முதல் வாய்ப்பிலேயே அடிபட்டு விழுந்தவர்களாக நாடகமாட வேண்டும்... மிக், ஜான், யுகோ மூவரிடமும் இதைச் சொல்!
அடுத்து அவர்களை நோக்கி தோட்டாக்கள் சீறி வந்தன...
ஆஆ...



பலர் சரிந்து வீழ்ந்தார்கள். மாத்யூஸ் கும்பலும் வலிதாளாமல் கதறுவதுபோல் நடித்து கீழே சரிந்தார்கள்.
ஆ...
ஆஆ
ஐயோ...!
ஆஆஆ...
ஐவரும் மற்றவர்களோடு பிணம் போல் கிடக்க மிஞ்சிய ஜெர்மானியர்கள் முன்னேறிச் சென்றனர்
அணிந்திருக்கும் வெள்ளை ஆடை பார்வையை கவரவில்லை என்பதால் நாங்கள் குறி வைக்கப்படவில்லை...
யுகோ... உன்னுடைய படை சும்மா தூள் கிளப்புகிறது போலிருக்கிறது...
பொறுக்கி எடுக்கப்பட்ட வீரர்கள்... செத்து விடுவார்களே ஒழிய சரணடைய மாட்டார்கள்


முயற்சி தோற்றுப் போனதால் எஞ்சிய ஜெர்மானியர்கள் பின் வாங்கினர்...
காயமடைந்தவர்களை தூக்கிச் செல்ல ஏற்பாடாகிறது... செத்தது போல் நடி!
ஜெர்மானியர்கள் போய்விட்டனர்... அங்கே மயான அமைதி நிலவியது...
அப்போது திடீரென்று மிக் சோகமாக அலறினான்...
ஜுல்ஸ் நம்மைப் போல் நடிக்கவில்லை - நிஜமாகவே அடிபட்டு விழுந்திருக்கிறான்!
கடவுளே...! இப்படியொரு துன்பமா?
பதுங்கு தளம் ஒன்றிலிருந்த வீரர்கள் இவர்களுடைய அலட்சியமான நடமாட்டத்தை கண்ணுற்றனர்...
நாஜிப் பன்றிகள் - சுட்டுத் தள்ளு


சீறிக்கொண்டு வந்தன தோட்டாக்கள்
ஏய்... நாங்கள் எதிரிகள் இல்லை நிறுத்துங்கள்
சுடுவதை நிறுத்துங்கள்! நான் - யுகோதான் இங்கே இருக்கிறேன்!
மாத்யூஸின் கூக்குரல் வியர்த்தமாகிப் போனது... ஆனால் யுகோவின் குரலை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டனர்...
அடடே... ஆள் தெரியாமல் நாம் பாட்டுக்கு தாக்கி விட்டோம்
சில நிமிடங்களுக்குப் பின் -
ஜெர்மானியர்கள் தாக்கியபோது மீண்டும் நாம் சந்தித்துக் கொள்வோம் என்ற நம்பிக்கையே இல்லை...! அந்த இங்கிலீஷ்காரருக்கு படுமோசமான காயமா?
இங்கிலீஷ்காரனில்லை - ப்ரெஞ்சுக்காரன்... தீர புருஷன்!


நிலைமை நினைத்த மாதிரி அத்தனை மோசமாகிவிடவில்லை... விடியற்காலையில் ஜுல்ஸ் எழுப்பிய கண்டனக் குரல் மரணத்தின் நிழல் அவனைவிட்டு விலகி ஓடிப்போன உண்மையை பறை சாற்றியது...
இங்கிருந்து ஓடிப்போக விடுங்கள் என்னை...! பென்சில் சீவத் தெரியாத பயலை எனக்கு சர்ஜரி பண்ண அனுமதிப்பது அநியாயம்...!
சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தான் ஜுல்ஸ்
முதலுதவி பயிற்சி முறைப்படி எடுத்திருக்கிறேன் கேப்டன்
விடாதீர்கள் அவனை... நான் என்ன கினியா பன்றியா - சோதனை சர்ஜரி நடத்திப் பார்க்க?
ஜானை விட்டால் அருகில் மருத்துவம் தெரிந்த எவரும் இல்லை சற்று பொறுமையாக இரு...
அதிர்ஷ்டவசமாக ஜுல்ஸ் சுயவுணர்விழந்து போனான்... ஜான் அறுவை சிகிச்சையை முடித்த பின்னரும் அவன் மயக்க நிலையிலேயே இருந்தான்
உன் முரட்டு விரல்கள் இயந்திரங்களைத்தான் லாவகமாக இயக்க பார்த்திருக்கிறேன்... இப்படியொரு அதிநுட்பமான செயல்திறன் அவற்றிற்கு உண்டென்பதை நேரில் கண்ட பின்னரும் என்னால் நம்ப முடியவில்லை ஜான்
காயம் அத்தனை மோசமில்லை... ஆனால் இரத்த இழப்பு கணிசமாக ஏற்பட்டிருக்கிறது


மாத்யூஸ் வெளியே வந்தபோது யுகோ அங்கே காத்துக் கொண்டிருந்தான்
எப்படியிருக்கிறான்?
சரியாகிவிடும்... ஜான் செய்தது ஒரு சாதனை... இந்த கோட்டையை சுற்றி வந்து ஒரு நோட்டம் விடுவோமே!
ஒரு நுழை வாசல் அருகே மாத்யூஸ் நின்று நிதானித்தார்...
நான் கேட்டுக் கொண்டபடி சுற்றுப்புறம் சுத்தம் செய்யப்பட்டிருப்பதில் மெத்த திருப்தி!
திட்டம் கச்சிதமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதால் முடிந்த அளவு நிறையப் பேரை இங்கே வரவழைத்தேன்.
இப்பகுதி முழுக்க, நம் விமானம் எதுவும் தரையிறங்க முடியாதவாறு பாறைக் கற்களை பரப்பி வைத்திருந்தார்கள் ஜெர்மானியர்கள்!
அந்த தடை இப்போது களையப்பட்டு விட்டது!


லிஃப்ட்டில் பூமியினுள் ஆழத்திற்கு போனார்கள்...
இது மாதிரி பல ஷெல்ட்டர்கள் இருக்கின்றன... ஒவ்வொன்றிலும் ஏகப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகள், உணவுப் பொருட்கள், தண்ணீர், பெட்ரோல், வாகனங்களுக்கு உதிரிப்பாகங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.
2
மீண்டும் தரைமட்டத்திற்கு வந்தபோது அங்கிருந்த ஒரு நகரும் கான்கிரீட் தளத்தை மாத்யூஸிற்கு காட்டினான் யுகோ...
இந்த நகரும் தளத்தையும் அதனடியில் உள்ள பீரங்கி வண்டிகளையும் அருகேயுள்ள கண்ட்ரோல் இலக்கிலிருந்து இயக்க முடியும் வாருங்கள் காட்டுகிறேன்
சில நிமிடங்களுக்குப் பின் பல குழாய்களைக் கொண்ட பீரங்கி வண்டிகள் மேலெழும்பி நின்றன...
ஒரே சமயத்தில் ஆறு ராக்கெட்டுகளை அனுப்பும் வசதி படைத்தது... அருமை!


யுகோ சொன்னான் -
இது மாதிரி ஏகப்பட்ட ஆயுதங்கள் இங்கே இருக்கின்றன
ஜெர்மன் தாக்குதலை — இந்த அமைப்புகளைக் கொண்டே முறியடித்துவிட முடியும். ஆனால் கண்ட்ரோல் இலக்கிலுள்ள விசைகளை படித்தறிய நமக்கு வாரக் கணக்கில் அவகாசம் தேவைப்படும்...
இதற்கிடையே, அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் சில நாஜி அதிகாரிகள் அந்தக் கோட்டை இருக்கும் திசையில் உற்று நோக்கிக் கொண்டு நின்றனர்...
அங்கே என்னவோ நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் எதுவுமே தெளிவாக தெரியவில்லை. உனக்கு ஏதாவது தென்படுகிறதா?
இல்லை... ஜெனரல்... பனி மூட்டம் பார்வையை மறைக்கிறது
எக்கரின் அறிக்கையால் தூண்டப்பட்ட ஹிட்லரின் மெய்க்காவல் படையினர் தங்களுடைய படைப்பிரிவுக்கு உதவிட அங்கே ஓடோடி வந்திருந்தனர்.
அந்தக் கோட்டையை எப்படியாவது மீட்டு வசப்படுத்த வேண்டும் - உன் யோசனை என்ன?
பீரங்கிப் படை ஒன்றை அங்கே வர உத்தரவிட்டிருக்கிறோம். நாளை அது இங்கே வந்து சேர்ந்துவிடும்


கோட்டை அருகே அதிரடிப்படையினர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.
பாறைகள் அகற்றப்பட்டு நிலம் சமதளமாக்கிவிட்டது
ஆனால் வானம் தெளிவாக இருக்குமா..? நம் திட்டம் முழு வெற்றி பெற அது ஒரு முக்கியமான அம்சம் ஆயிற்றே!
அன்று முழுக்க விட்டுவிட்டு பனி பெய்தது. ஆனால் விடியும் வேளையில் மேகங்கள் கலைந்து விட்டன...
கேப்டன்... தெற்கிலிருந்து விமானம் வருகிறது!
நான்கு விமானங்கள் அங்கே வந்து தரையிறங்கின...
இவை - நாம் தப்பி விலகிச் செல்ல! நேற்றிரவு நான் ஜெனரல் செல்பையோடு இதுபற்றி விவரித்தபோது யுக்தி பலிக்குமா என்ற சந்தேகம் அவருக்கு... ஆயினும் நான் கோரியபடி விமானங்களை அனுப்பி வைத்துவிட்டார்...
டகோடா விமானங்களில் வந்தவர்கள் கீழே இறங்கினர்...
காப்டன் மாத்யூஸ் என் பெயர் ரண்டால்! ஆஸ்ட்ரிய ஆல்ப்ஸ் பகுதியில் போய் இறங்குமாறு உத்தரவிடப்பட்ட போது இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று தோன்றியது எனக்கு...
விளக்கம் பின்னர் உரிய தருணத்தில் கிடைக்கும்!


அப்போது - கண்காணிப்பு பணியிலிருந்த சிப்பாய் உரக்கக் குரல் கொடுத்தான்.
எதிரிகளின் டாங்குகள் ஏகப்பட்ட எண்ணிக்கையில் வந்து கொண்டிருக்கின்றன....
ஒவ்வொரு வண்டியிலும் பஸூக்கா அமைப்பு உண்டு... கடுமையான போராட்டமாகத் தானிருக்கும்
கண்ணி வெடிகளை புதைக்க எங்களுக்குத் தேவையான அவகாசத்தை, எதிரிகளை தேக்கி நிறுத்தி நீதான் உறுதிப்படுத்த வேண்டும்!
கோட்டையிலிருந்த ஒரு கனரக வாகனத்தை கிளப்பிக் கொண்டு விரைந்தது அதிரடிப்படை - விமானங்கள் கொண்டு வந்த வெடிகளோடு!
நம்மிடையே வெடிகுண்டு ஸ்பெஷலிஸ்ட் ஜூல்ஸ் இருந்தும் அவன் இல்லாமலே சாதிக்கவேண்டிய நெருக்கடி நமக்கு



எதிரிகளின் டாங்கிகள் நெருங்கி வந்துவிட்டன.
நம் வெடி குண்டுகள் பெருத்த நாசத்தை விளைவிக்க வேண்டுமாதலால் நெருங்கிச் செல்லும் வரை சுடத் தொடங்க வேண்டாம்...
பனியில் செல்வது கஷ்டமாக இருந்தாலும் அந்த டாங்கிகள் நிதானமாக முன்னேறிக் கொண்டிருந்தன
நான் சொல்லும்வரை சுடாதீர்கள்
நெருங்கி வந்த டாங்கி தன் பீரங்கி குழாயை திருப்பி சுடயத்தனித்த கணத்தில் -
கச்சிதமாக அடித்து விட்டாய் ... சபாஷ்!


அதையடுத்து டாங்கிகள் ஒவ்வொன்றும் பஸூக்காவின் தாக்குதலுக்கு இலக்காகி - நாசமாகிப் போயின...
நம் ஆயுதங்களினாலே நமக்கு அழிவு - கொடுமை?
அங்கே நடந்த ஆக்ரோஷமான மோதல் மலை முகடுகளில் எல்லாம் எதிரொலித்தது..
டூம்! டூம்!
டாங்கியில் இருந்தவர்கள் வெளியேறி காலாட்படை போல சண்டையிட தொடங்கினார்கள்... ஆனால் சரமாரியாக தோட்டாக்களை பொழிந்த மெஷின் துப்பாக்கிகளுக்கு முன் அவர்கள் எம்மாத்திரம்...
ஆ ஆ ஆ...
மேலும் பல டாங்கிகள் வருகின்றன இங்கே...
மூண்ட புகைப்படலத்தை திரையாகக் கொண்டு மேலும் எதிரி டாங்கிகள் நெருங்கி வந்தன...
ம்ம்... இடப்பக்கமாக திரும்பி முன்னேறுங்கள்


அங்கங்கே சிறிய அளவிலான வெற்றிகள் எதிரிகளுக்கு கிட்டின...
ஆஆ...
ஆனால் விரைவிலேயே பெரும் அழிவுக்கு உள்ளானது எதிரிகளின் படை...
முறியடித்து விட்டோம்... ஆனாலும் சண்டை இத்தோடு ஓய்ந்து விட்டதாக கருதிவிடக்கூடாது...
ஜெர்மானிய படை மீண்டும் ஒன்று கூடி பலம் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் மாத்யூஸ் மிக், ஜான் மூவரும் வெடிகளை பொருத்துவதில் மும்முரமாக ஈடுபட்டனர்.
முடிந்தது வேலை... வடக்கு முனைக்கு உச்ச வேகத்தில் விடு.


வடமுனை சென்றடைந்ததும் யுகோவை வரவழைத்தார் மாத்யூஸ்
எல்லாம் ரெடி யுகோ... எதிரிகளுக்குத் தெரியாமல் நைஸாக இங்கிருந்து ஓடிப்போக வேண்டும்... அதற்கான ஏற்பாடுகளை கவனி...
பதுங்கு தளத்திலிருந்தவர்கள் வெளியேறி ஓடினார்கள்...
சுமார் நூறு பேர்களை விமானங்கள் மூலம் அப்புறப்படுத்தியாக வேண்டும்...
எதிரிகள் பார்த்து விடலாகாது... நம்மை!
நடந்த மோதலின் போது செயலிழந்து நின்று போன டாங்கியினுள்ளிருந்து ஒரு ஜெர்மானிய கமாண்டர் இவர்கள் ஓட்டம் பிடிப்பதை கவனித்துவிட்டான்...
கோழைகள்... ஓட்டம் பிடிக்கிறார்கள் பார்!
312


ரேடியோ இன்னமும் சீராகத்தான் இருக்கிறது... கண்ட்ரோலை கூப்பிடு
ஓ.கே. லெப்டினென்ட்
சரிவின் அடிவாரத்தில் புதரின் மறைவில்
ஒரு டாங்கியிருலிருந்து செய்தி.. காப்டன்! - எதிரிகள் இரகசிய மாளிகையிலிருந்துவெளியேறி ஓட்டம்பிடிக்கிறார்களாம்
எதிரிகள் சுறுசுறுப்படைந்தனர் -
தெற்கிலிருந்து வந்த விமானம் அங்கிருந்தவர்களை ஏற்றிச் செல்லவே அனுப்பப்பட்டிருக்க வேண்டும்
யாரையும் தப்பவிடக்கூடாது. கூடுதல் படை வந்து சேர்ந்ததும் நானே முன் நின்று தாக்குதலை நடத்தப் போகிறேன்
சமவெளி பரப்பில் ஒரு குழு டகோடா விமானத்தின் அருகே வந்து சேர்ந்துவிட்டிருந்தது...
காயமடைந்தவர்களுக்கு முதலிடம்... அந்த ப்ரெஞ்சுக்காரனை முதலில் ஏற்றுங்கள்...



ஆனால் ஜுல்ஸ் மறுத்தான் -
காப்டன் மாத்யூஸ் மற்றும் என் தோழர்கள் ஜானும் மிக்கும் வராமல் நான் மட்டும் இங்கிருந்து போகச் சம்மதியேன்
பயணிகள் ஏறி இருக்கைகள் நிறைந்ததும் ஒவ்வொரு விமானமாக கிளம்பத் தொடங்கின...
நான் உன்னோடு இருக்கிறேன் ஜுல்ஸ்
நீ அருகில் இருப்பது தெம்பைத் தருகிறது யுகோ... காப்டன் சீக்கிரமே வந்துவிடுவாரில்லையா!
இன்னும் ஒரே ஒரு விமானம்தான் புறப்படவேண்டும். அதிரடிப்படையினர் மூவரும் விரைந்து வந்து சேர்ந்தார்கள்
ஜெர்மானியர்கள் சரிவில் வந்து கொண்டிருக்கிறார்கள். அதிக அவகாசம் இல்லை நமக்கு



பைலட் எஞ்சினை முடுக்கிய வேளையில் ஜூல்ஸை தூக்கி விமானத்தில் ஏற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது
எஞ்சினின் இயக்கம் ஏன் வித்தியாசமாக கேட்கிறது...
ஜானின் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துவது போல் எஞ்சின் சிறு உறுமலோடு ஓய்ந்து போனது
சே... கடைசி வினாடியில் இப்படி கழுத்தை அறுக்கிறதே - இதோ... ஒரு நொடியில் சரி செய்து விடுகிறேன்...
அனைவரும் எதிரிகள் வந்து கொண்டிருந்த திசையில் பார்வையை ஓடவிட்டவாறு விழிப்போடு இருந்தார்கள்.
சிறு மின்சார கோளாறுதான்... பயப்பட ஏதுமில்லை
வினாடிப் பொழுது தாமதித்தாலும் விளைவு விபரீதமாகிவிடலாம் என்கிற நெருக்கடி...



வினாடிகள் யுகங்களாக கழிந்தன...
ஏதாவது தென்படுகிறதா ஜான்,?
இல்லை காப்டன் - ம்ம்.. பொறுங்கள்... ஆங் - மேட்டில் ஏறி சிறுசிறு குழுக்களாக பிரிகிறார்கள்.
விமானத்தின் இயக்கம் நிறுத்தப்பட்டது... நிலவிய மயான அமைதியினூடே முரட்டுக் குரலில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் தெளிவாக கேட்டன.
எதிரிகள் நெருங்கி விட்டார்கள்... விமானத்தை கிளப்பிக் கொண்டு ஓடிப் போவதில் தாமதமானால் தொலைந்தோம்!
சுற்றிலும் பார்வையை ஓடவிட்ட ஜுல்ஸ் திடீரென்று கத்தின...
ஆபத்து... ஆபத்து...


எக்கரின் தலைமையில் ஜெர்மன் படை ஒன்று பின்னாலிருந்து வளைத்துக் கொண்டு முன்னேறி வந்தது
அந்த இருவரையும் தீர்த்துக் கட்டுங்கள்
காப்டன்... பின்னால் பாருங்கள்


அதைத் தொடர்ந்து துப்பாக்கிகள் சீறின... முந்திக்கொண்டு விட்ட மின்னல் படைக்கே வெற்றி


ம்பிக்கையோடு வந்த அந்த ஜெர்மானிய
ர்னல் செத்து விழுந்தார்... அவருடைய
படைகளும் சின்னாபின்னமாகிப்
போயின...
எஞ்சினை மீண்டும் இயக்கிப் பாருங்கள்



எஞ்சின் சீராகிவிட்டது... பைலட் எல்லோரையும் கூவி அழைத்தான்
வாருங்கள்... புறப்படலாம்
பெரும்படை நெருங்கிவிட்டது...
தப்பியோட போதிய அவகாசம் இருக்கிறது - பதறவேண்டாம்
அனைவரும் பாய்ந்து ஏறிக்கொண்டதும் டகோடா ஜிவ்வென்று மேலெழும்பியது... ஓடி வந்த ஜெர்மானிய படை தோட்டாக்களால் விமானத்தை துள்ளக்க முயன்று தோற்றது...
ஏற்று... மேலே!
எதிரிகளின் சுடும் வரம்பைத் தாண்டி வந்துவிட்டது விமா
காப்டன் உங்களுக்கு காயமா?
இல்லை... ஆனால் விமானத்தின் பக்கவாட்டு பகுதியில் தோட்டா துளைத்த துளைகள் சில இருக்கின்றன - புதிதாக!


விமானம் மேலெழும்பிய இரண்டு நிமிடங்கள் கழித்து கீழே பயங்கர இடியோசை எழுந்தது... அதை தொடர்ந்து கரும்புகை மூட்டம் பரவியது...
டூம்-டூம்!
நாம் வைத்துவிட்டு வந்த வெடிகளில் முதல் சுற்று பற்றிக் கொண்டதின் விளைவு இது... காப்டன்
ஆமாம் மிக்... உச்ச கட்டம் இனிமேல் தான் வரும்!
சில விநாடிகளுக்குப் பிறகு எரிமலை முழு அளவில் குமுறி வெடிப்பது போன்ற பெருத்த ஓசையோடு அந்த சமவெளிப் பரப்பு பிரளய கால அழிவுக்கு உள்ளானது...
ஹிட்லரின் தொடர்ந்து போராடும் வெறியை இது நிச்சயம் தணிக்கும்...
யாராலும் அழிக்க முடியாது என்று அவர் எண்ணி வந்த இந்த இரகசிய கோட்டை நிர்மூலமாக்கப்பட்ட இந்தக் கணத்தில் அவர் இங்கே இருந்திருக்க வேண்டும்...
கீழே செயலிழந்து நின்றுவிட்ட ஜெர்மானிய அதிகாரிகளுக்கு பெரும் பிரச்சனை -
கோட்டை நாசமாகிவிட்ட செய்தியை ஹிட்லரிடம் யார் போய்ச் சொல்வது?
அந்தக் கடமையை நிறைவேற்றச் செல்பவர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!
முற்றும்




வாசக ஓவியர்: B.மணி, பொன்னாங்காடு, ஜல்லிபட்டி (Po)
கேத்தனூர்(via), பல்லடம்(Tk), Pin-641671.

## "மாதம் ஒரு வாசகர்"



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | H. யாசின் வயது : 15 |
| முகவரி | : | ஹனீப் சாயபு வீதி, மணலூர்ப் பேட்டை |
| கல்வித் தகுதி | : | 10th Pass |
| பொழுது போக்குகள் | : | கிரிக்கெட்; கிரைம் நாவல் சேர்த்தல் எப்போதும் காமிக்ஸ் படித்தல் |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | 6 வருடங்கள் |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | : | நண்பன் C. ஜானி மூலம் |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிகைகள் என்ன? | : | பாக்யா, ராணி காமிக்ஸ், மேகலா காமிக்ஸ், ராணி |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? | : | எதைச் சொல்வது? அனைத்தும் அருமை |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : | குடும்பமே! |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | பாதுகாக்கிறேன்! |

# நரகத்தைப் பார்த்தேன்...! (9)




'பள்ளிக்கூடத்தில் மதிய உணவு இடைவேளைநேரத்தைப் போல் நான் எதையுமே வெறுத்ததில்லை.'
'ஒவ்வொரு மாணவர்களும் சுவையான சாப்பாடு அடங்கிய டிபன் பாக்ஸ்களுடன் வருவார்கள்.'
'டிபன் பாக்ஸில் சாப்பாடு கொண்டு வர என்னால் முடியாது. எங்களால் அரிசி கேக் கூட கொண்டுவர முடியாத நிலை. எங்களால் பார்லியால் செய்யப்பட்ட ரொட்டிகளையே சாப்பிட முடிந்தது.'
'அந்த மத்தியான சாப்பாட்டு நேரம். என்னைப் பெரிதும் பாதித்தது. ஏனெனில் 10 யென் பெறக்கூடிய ரொட்டித் துண்டுகளைத் தான் நான் சாப்பிட்டேன்.'
'பள்ளிக்கூட நாட்களில் மகிழ்ச்சியாக இருந்ததாக எனக்கு ஒன்றுகூட நினைவில் இல்லை!'
F! எல்லாமே அந்த குண்டால் வந்த னை... அமெரிக்கர்கள் எங்கள் மீது ாட்ட அணுகுண்டு தான்... என்னை இப்படியாக்கி விட்டது!
நடுநிலைப் பள்ளியில் 8 ம் வகுப்பு படிக்கும் போது ஒரு காமிக்ஸ் இதழுக்கு நானே ஒரு கார்டூன் போட்டு அனுப்பினேன். அதற்கு எனக்கு ஒரு மரியாதை கிடைத்தது. அந்தக் கார்டூன் வெளியிட்ட அவர்கள் சின்ன எழுத்துக்களில் என் பெயரையும் வெளியிட்டிருந்தனர்.



அதைத் தொடர்ந்து...
அம்மா! என்னுடைய கார்டூன் இந்த புத்தகத்தில் வெளியாகியிருக்கிறது!
ரொம்ப அபாரம் கெய்ஜி!
நடுநிலைப் பள்ளிப் படிப்பை முடித் உடன் என்னுடைய ஓவிய ஆற்றலுக் உதவும்படி ஏதாவது செய்ய விரும்பினேன். எனவே விளம்பர போர்டுகள் எழுதுமிடத்தில் வேலைக்குச் சேர்ந்தேன்.
சரியாச் செய் முட்டாளே!
என்னுடைய முதலாளி போரில் ஈடுபட்டுத் திரும்பியவர். எல்லா நேரமுமே என்னை அடித்துத் தொலைவார்.
என்னை அடிப்பதை நிறுத்து கொரில்லாவே! குத்துச் சண்டை வீரர்கள் பயிற்சி பெறும் மணல் மூட்டை யல்ல நான்!
எனக்கு முதல் மாத சம்பளமாக 4 ஆயிரம் யென் கிடைத்தது! அதைக் கொண்டு நீண்டகாலமாக நான் ஏங்கித்தவித்த வாழைப் பழங்களையும் இனிப்பான பீன்ஸ் கேக்குகளையும் வாங்கினேன்.
இப்போது என் குடும்பத்தில் எல்லோருமே வேலை செய்தோம். எனவே வீட்டில் மீண்டும் மகிழ்ச்சி எழுந்தது...
என் அம்மாவின் முகத்தில் கூட சிரிப்பு மீண்டும் திரும்பிவந்தது...
என்னுடைய தோள்களை இன்னும் கொஞ்சம் பிடித்து விடு கெய்ஜி!
இங்கேயா அம்மா?
விளம்பர போர்டுகள் எழுதுமிடத்தில் நான் என்ன செய்தேன் என்பது இப்போது அவசியமில்லை. அதே நேரம் நான் கார்டூன் வரைவதை நிறுத்தவேயில்லை.



மிஸ்டர் நகஸாவாவுக்கு பதிவுத் தபால் வந்திருக்கு!
யெஸ்?
எனக்கா?
யாஹோ! கேலிச் சித்திர புத்தக நிறுவனத்திற்கு நான் அனுப்பிய 16 பக்கத்திற்கு இரண்டாவது பரிசு கிடைத்துள்ளது!
இந்த பணத்தைக் கொண்டு வண்ணக் கலவை சேர்க்கும் பிளேட்டையும் தண்ணீர் வைக்கும் பாத்திரத்தையும் வாங்குவேன்!
என்னுடைய கதைக்கு முதல் தடவையாக கிடைத்த 2 ஆயிரம் யென் பணத்தால் பெருமகிழ்ச்சியடைந்தேன்.
அந்த பணத்தைக் கொண்டு வாங்கிய வண்ணக் கலவை சேர்க்கும் பிளேட்டையும், தண்ணீர் வைக்கும் பாத்திரத்தையும் இப்போதும் நான் பயன்படுத்துகிறேன்!
19 வயது ஆனபோது விளம்பர போர்டு எழுதும் முழுப் பொறுப்பும் என்னிடம் விடப்பட்டது. ஒருக்கால் இது எனக்கு தலைக் கனத்தை உண்டாக்கியிருக்கும்... எனவே முரட்டுத் தனமாகவும் நடக்க ஆரம்பித்தேன்.
பெருமளவு குடித்ததால் அடிதடிகளிலும் நான் இறங்கினேன்.
தடியா! இந்தா இதை வாங்கிக்கோ!




தொடரும்...

இந்த இதழ்முதல்_ புதிய பகுதி!






| | |
|---|---|
| பெயர் | : அ. துரைசிங் பாக்யராஜ் வயது : 21 |
| பிறந்த நாள் | : |
| கல்வித்தகுதி | : + 2 |
| பொழுதுபோக்கு | : லயன்; முத்து காமிக்ஸ் படிப்பது; photographics; துப்பறியும் நாவல்கள் படிப்பது |
| முகவரி | : New Format, No: 1, வீரப்பிள்ளை தெரு, க்ராஸ் பெங்களூர் - 560 042. |
| காமிக்ஸ் கருத்து | : லயன் & முத்து காமிக்ஸ் இருவரும் எனக்கு நெருங்கிய நண்பர்கள், பொழுது போக்கிற்காக மட்டும் என்றில்லாமல் - இவர்களின் அனுபவங்களில் பகிர்ந்து கொண்டு தினமும் உறவாடி வருகிறேன். |



| | |
|---|---|
| பெயர் | : இரா. தி. முருகன் வயது . 21 |
| பிறந்ததேதி | : 17. 1. 1975 |
| படிப்பு | : B.Com. |
| முகவரி | : R. T. முருகன். C/6 செந்தூரன் காலனி, 3-ஆவது தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 091. |

இயற்கையில் இடதுகை பழக்கமுள்ளவன், இயற்கையை ரசிப்பவன், புதுக்கவிதை எழுதுவது உண்டு. காமிக்ஸ் சேகரிப்பாளன். இதுவரை சுமார் 700 காமிக்ஸ் சேகரித்துள்ளேன். என்னுடைய தபால்தலைகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை என்னுடைய நண்பர்களுக்கு தந்துவிட்டேன். பேனா நண்பர்களை பெறுவதில் அதிக நாட்டம் கொண்டவன். அவர்களை சகோதரர்களாக பாவிக்கும் எண்ணம் உள்ளவன். இதுவரை 10க்கும் மேற்பட்ட பேனா சகோதரர்களை பெற்றுள்ளேன். இனியும் பெறுவதை இலட்சியமாக கொண்டவன். லயன் காமிக்ஸின் முதல் இதழினை கண்டு காதல் கொண்டு, தொடர்ந்து புதிய வாசகர்களுக்கு உதவும் மனப்பான்மை கொண்டவன். எனவே புதிய வாசகர்கள் தாராளமாக தொடர்பு கொள்ளலாம்.

# கேப்டன் பிரின்ஸ் தோன்றும் இருளின் சாம்ராஜ்யம்!




அடுத்த திருப்பத்திலே ஒரு கடை இருக்கு...
இங்கே ஏற்கனவே நீ வந்திருக்கியா?
போன யுகத்திலே - உன்னை எல்லாம் சந்திக்கறதுக்கு முன்னாடி... இளைஞனா இருந்தப்போ...
ஆனால் பாக்கோட கடை மட்டும் வருடம் இத்தனை உருண்டோடியும் இடம் மாறவே இல்லை -
FLITTER - MOUSE FOGGARTY'S
AMERICAN BAR
OPEN
Ice Cold Beer
அப்பாடி... வந்திட்டதா - நீ சொன்ன இடம்!
உள்ளே போறோம்... நீதான் ஆர்டர் பண்றே... நான் வாயை திறக்க மாட்டேன்... நீ செல்லாத நாணயத்தை கொடுக்கிறே... - புரிஞ்சுதா!
இதெல்லாம் ஏன்னு புரியலை - ஆனா நீ சொல்றபடி செஞ்சுட்டுப் போறேன்...
இந்தாப்பா... ரெண்டு கிளாஸ் ஐஸ் பீர் கொடு - நுரைகும்னு இருக்கணும்!
இங்கிலீஷ் பூட்ஸ் அணிஞ்சிருக்கிற குண்டனுக்கு ஒரு கிளாஸ்... 72 கிலோ எடையுள்ள வாட்டசாட்டமான ஆசாமிக்கு ஒரு கிளாஸ்...
?



ஒரு டாலர் கொடுங்க - இப்போத்தான் வந்து கப்பல்லோ்ந்து இறங்கியிருக்கீங்க... நாணய மாற்றம் செய்துக்க அவகாசம் இருந்திருக்காது... அதான்...
நே... ச... சரி!
ஹோய்... மாலுமி... என் னை நீ கவனிக்கலியா?
இ... இல்..லை வந்து.. பா...பார்த்தேன் - ஆ.. ஆனா
குருடன்தானேன்னு செல்லாக்காசை கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறியா.... கிழட்டு முண்டம்
நா... நான் இல்லை அதாவது... இது.. இப்படி நடக்கும்னு -
மரியாதையா அஞ்சு டாலரை எடுத்து வை - இல்லேன்னா இங்கே நடக்கிற கதையே வேற...
பார்வையற்றவனே அவனை விட்டுவிடு - இது சும்மா ஒரு நாடகம்.
?
பெர்னார்ட் பிரின்ஸ்! பித்தலாட்டக்காரனே...! நீ வாயை திறக்காட்டி நான் எப்படி உன்னை அடையாளம் தெரிஞ்சுக்கறதாம்?
வாங்க... உக்கார்ந்துக்கிட்டு விபரமா பேசலாம்
ஆனா... இவனோட கண்ணு...
ஆமா... அவன் குருடன் தான்...


ஜுன் வந்தா 12 வருடமாச்சு... ஆபரேஷன் பண்ண முடியாதுன்னுட்டாங்க... உன்னோட பாராட்டுக்களை ஏத்துக்கறேன்
அதாவது... நீ அன்றாட காரியங்களை எவ்வளவு சீரா கவனிச்சுக்கிறேங்கறது ஆச்சரியமாத்தான் இருக்கு!
12 வருஷமாத்தான் இப்படி - அதுக்கு முன்னாடி நான் பட்ட கஷ்டம் இருக்கே... அப்பப்பா... இப்போ நெனைச்சாலும் உடம்பு பதறுது... இந்த விபரங்களை எல்லாம் பிரின்ஸ் உங்கிட்டே விபரமா சொல்லலியா?
இல்லை!
ஆனாலும் இந்த பூட்ஸ், எடை, காசு - இதெல்லாம் எப்படி...
ஒரு புலன் செயலிழந்து போச்சுன்னா அதை மற்ற புலன்கள் ஈடுகட்டிவிடறதுதான் சகஜம்... கொஞ்சம் பயிற்சி வேணும் - அவ்ளோதான்... மத்தவங்க நடையை கூர்ந்து கேட்டா பூட்ஸ், எடை இதெல்லாம் கணிச்சுடலாம்... தொட்டு உணர்ந்தே செல்லாக்காசை அடையாளம் தெரிஞ்சுக்கலாம்... கடல் பயணத்திலேர்ந்து வந்திருக்கிறதை மணத்தை வச்சே நிர்ணயம் பண்ணிடலாம்... பாதி பயிற்சி, பாதி உள்ளுணர்வு பாதி - பழைய அனுபவம்... இந்த மூணு பாதியை வச்சு சராசரி ஆளைவிட சமர்த்தா காரியம் பண்ணிடலாம்...
தன் திறமையை இவன் இன்னமும் தெளிவா சொல்லலை பார்னே... அந்த விசேஷ திறமை மட்டும் இவன்கிட்டே அன்னிக்கு இல்லேன்னா பிரின்ஸுங்கிற ஆளை நீ வாழ்நாளிலே சந்திச்சிருக்கவே மாட்டே...
அடடே கதை ரொம்ப சுவாரஸ்யமா இருக்கும் போலிருக்கே!




'சொல்றேன்... அந்தக் காலத்திலே இன்டர்போல்லே நான் இன்ஸ்பெக்டரா இங்கே வந்து சேர்ந்தேன். அப்போ இந்த பக்கார்டி ரொம்ப பிரபல்யம்...'
'பிக்பாக்கெட்... வழிப்பறி... பாங்க் கொள்ளை - ஆனா... அவனை யாராலுமே பிடிக்க முடியலை...'
இங்கே இருக்கிற ஒவ்வொரு கட்டிடமும், சாலையும், அத்துபடி... அவனோட சாகஸங்களைக் கேட்டு மூக்கில் விரலை வச்சிருக்கிறேன்...
ஆனா நான் இங்கே வந்தது வேறொரு முக்கிய பணி நிமித்தம் - அடுக்கடுக்கா கொலைகளை செய்து படுபாதகம் புரிந்து கொண்டிருந்த ஸிமிட் கும்பலை பிடித்து வேரறுக்க.
பாக் பற்றியும் என்கிட்டே புகார் வந்தது...
அவனை எங்கே பார்க்கலாம்னும் எனக்குத் தெரியும்...


அவனை வாரக் கணக்கிலே சுற்றிச் சுற்றி வந்தேனே தவிர அவன் மேலே கைவைக்க வகையே இல்லை... ஆமா - ஒரு ஆதாரமோ தடயமோ அவனுக்கு எதிரா கெடைக்கலை...
வாங்க இன்ஸ்பெக்டர்...
எங்களிடையே நெருக்கம் அதிகமானது -
என்னை எப்போ கைது பண்ணப் போறீங்க...?
நீ சிறைச்சாலையிலே கம்பி எண்ணுகிற நாள் அதிக தொலைவிலே இல்லை பாக்...
என்னைப் பிடிச்சு உள்ளே போட்டீங்கன்னா பல ஏழைகளோட வயித்திலே அடிச்ச பாவம் உங்களை சேரும் தெரியுமில்லே
உண்மைதான் - பாக் பணக்காரங்களை கொள்ளையடிச்சான்... அந்த பணத்தை ஏழைகளின் நல்வாழ்விற்காக தாராளமாக செலவழிச்சுக்கிட்டிருந்தான்... இந்த நல்ல குணத்துக்காகவும், தொழில்லே அவனுக்கிருந்த அபார திறமைக்காகவும் அவனை நான் ரொம்பவும் நேசிச்சேன்.
-சே
அப்பப்பா... பக்கத்திலே இருக்கிற சமையல்கட்டிலேர்ந்து வர்ற புகை - என்னமா கண்ணிலே எரிச்சலை தருது... ஊஹும் இங்கே நிற்கவே முடியலை...


அப்புறமா சந்திப்போம்
பாக்... கொஞ்சம் நில்லேன் - நீ நெனைக்கிற மாதிரி
வேண்டாம் - விடு... அவனை போகட்டும்
சமையல்கட்டிலேர்ந்து துளிபுகை வரலை... ஆனா... அவன்
அவனுக்கு வேற பிரச்சனை...
.. இப்போ... ஏனோ தெரியலை... எதையுமே அவனாலே சரியா குறி வைக்க முடியலை... போகிற போக்கைப் பார்த்தா சிகப்பு பந்துக்கும் மற்றவைகளுக்கும் வண்ண வேறு பாடுகூட அவனுக்கு தெரியாம போயிடலாம்.
!
பிரபல கண் மருத்துவரை போய் பார்த்தான் பாக்... ஆறுமாதங்களுக்குப் பின் அவன் முழு குருடனாகிப் போவான் - அறுவை சிகிச்சை எதுவும் பலனளிக்காது என்று அவர் சொல்லிவிட்டார்...
சீக்கிரமே நிறைய வாரி சேர்த்துக் கொண்டு தொழிலிருந்து ஓய்வு பெற்றுவிட பாக் தீர்மானித்திருந்த சமயம் அது. ஏகப்பட்ட திருட்டு, வழிப்பறிகளில் அவன் மும்முரமாக ஈடுபட்டிருந்த காலகட்டம் அது...
TML


அந்த ஊரின் சந்து, பொந்துகள் மூலை
முடுக்குகள் எல்லாம் அவனுக்கு
துல்லியமாக அத்துப்படியாதலால் யார்
கையிலும் அகப்படாமல் தப்பித்துக்
கொள்வது அவனுக்கு கைவந்த கலையாக
இருந்தது...
ஆனால் - இப்போது...? பார்வை இழப்பு
ஏற்பட்டபின் இந்த சாகஸங்கள் எல்லாம்
அசாத்தியமாக ... சுலபமாக
பிடிபட்டுவிடமாட்டானா?
இன்ஸ்பெக்டர் பிரின்ஸுக்கு பல
வாரங்களாக பாக்கின் பிரச்சனை பற்றிய
சிந்தனைதான். முடிவாக அவர் ஒரு
தீர்மானத்திற்கு வந்தார் ... சக அதிகாரிகளை
சம்மதிக்க வைப்பது அத்தனை சுலபமாக
இல்லை...
...சமூக சேவை இயக்கங்களின்
ஒத்துழைப்பும் தேவைப்பட்டது... முடிவில்
அவருடைய 'விஷப்பரீட்சை'க்கு
அங்கீகாரம் கிட்டிவிட்டது...
அதை செயல்படுத்தும் ஆர்வத்தோடு
பாக்கைத் தேடி ஓடினார் இன்ஸ்பெக்டர்
பிரின்ஸ்...



பாக்கை சம்மதிக்க வைப்பது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை... -நடந்தவை நடந்தவைகளாகவே இருந்து விட்டுப் போகட்டுமே என்று வேதாந்தம் பேசினான்... ஆனால் பிரின்ஸ் சளைக்கவில்லை... முடிவில் பாக்கின் சம்மதத்தை பெற்றுவிட்டார்
கடுமையான பயிற்சி... 'ஒவ்வொரு நாள் மாலையிலும் பல மணி நேரம்... இடங்களை அடையாளம் தெரிந்துகொள்ள, மற்றவர்களின் நடமாட்டத்தை புரிந்து கொள்ள என்று நுணுக்கமான பல பயிற்சிகள் கற்றுத் தரப்பட்டன.
சீக்கிரமே தேறிவிட்டான் பாக்... பார்வையற்ற நிலையிலும் எல்லோரையும் போல் காரியம் பண்ண கற்றுக் கொண்டு விட்டான்.
நுட்பமான பயிற்சிகளும் கூட தரப்பட்டன...
பார்வையிழப்பினால் எந்த கஷ்டமும் இல்லாமல் இயல்பான வாழ்க்கை வாழ பாக்குக்கு கற்றுத் தந்த பின்னர் இன்ஸ்பெக்டர் பிரின்ஸின் கவனம் ஸ்மித் கும்பல் மீது தீவிரமாகியது. அவர்களை வளைத்துப் பிடிக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டினான்...



ஆனால் -
திடீரென்று ஒரு வாய்ப்பு வலிய வந்த போது முதிர்ச்சியின்மை காரணமாக அதை சந்தேகிக்கத் தோன்றவில்லை அவருக்கு ...
அப்படியா...! -புறப்பட்டு வருகிறேன்! நிச்சயமாகத் தெரியுமா... உனக்கு? இதோ
காரில் ஏறிப் பறந்தார்.... எதிரிகளின் வஞ்சக வலையினுள் வலியப் போய் விழுகிறோம் என்ற உண்மையை உணராமலேயே...
அங்கே தனியனாக போயிருக்கவே கூடாது...
காலம் கடந்து உறைத்தது அந்த உண்மை...
சமர்த்துக் கண்ணா....உன் பொம்மை'யை கீழே போடு!
ஸ்மித்... நீ இதுவரை செய்திருக்கும் மாபாதகங்களின் பட்டியலில் ஒரு போலீஸ் அதிகாரியை கொன்ற குற்றம் மட்டுமே இடம் பெற்றிருக்கவில்லை... அதையும் செய்துவிடு - உங்கள் ஒவ்வொருவருக்கும் சவப்பெட்டி செய்ய அளவு எடுக்க ஆள் வரும்!
அதைப் பற்றி எல்லாம் நான் சிந்தித்துப் பார்க்காமலில்லை... முட்டாளே




அதனால்தான் உனக்கு புதுமையான முறையில் மரணத்தை அறிமுகம் செய்து வைக்க திட்டம் போட்டிருக்கிறேன்...
காயம் இருக்காது... வயிற்றில் விஷம் இருக்காது... பிரேத பரி சோதனையில் எந்த தடயமும் கிடைக்காது... உன் முடிவு ஒரு மர்மச் சாவாக சரித்திரத்தில் இடம் பெறப் போகிறது...
இப்போது நீ தப்பியோட முற்பட்டால் சுட்டுத் தள்ளி பிணத்தைக் கொண்டு போய் புதை மணலினுள் தூக்கிப் போட்டு விடுவோம்... எந்த நெருக்கடியையும் சமாளித்து தப்பிப் பிழைக்க கடைசி மூச்சு வரை போராடும் உன் போன்ற சமர்த்தர்களுக்கு அப்படியொரு முடிவு பெருமை சேர்க்காது... எனவே, நீ என்னை பின்தொடர்ந்து முரண்டு பண்ணாமல் வா... கண்ணா!
'மன்னர் காலத்தில் எப்போதோ கட்டப்பட்ட சுரங்கப் பாதை... அதற்கு நுழை வாசல் எங்கே இருக்கிறது என்பது கூட இன்று ஜனங்களுக்கு மறந்து போய்விட்டிருந்தது... திரும்பிய திசை எல்லாம் கிளைகளாக பிரிந்து செல்லும் புதிரான அமைப்பு...'
'ஒரே கும்மிருட்டு... உள்ளே வெகு தொலைவு அழைத்துப் போனான்...'



நெளிந்து, வளைந்து எங்கோ சுற்றிக் கொண்டு போனது அந்த சுரங்கப்பாதை...
எட்டு நாட்கள் கழித்து நாங்கள் இங்கே திரும்பி வருவோம் உன் பிணத்தை சேகரித்துப் போக... உன் சடலத்தை கடல்கரையோரம் கண்டெடுக்கும் உன் சக அதிகாரிகள் எங்கே, எப்படி உனக்கு மரணம் சம்பவித்திருக்கக்கூடும் என்று தெரியாமல் திகைக்கப் போகிறார்கள்.
பரிதாபத்திற்குரிய பாவி என்பதாக ஒரு போலி அனுதாபத் தோடு என்னை உறுத்துப் பார்த்துவிட்டு நமுட்டுச் சிரிப்புடன் அங்கிருந்து அகன்றனர்
நான் கதறவில்லை, கெஞ்சவில்லை, பின் தொடர்ந்து ஓடவில்லை - அது அவர்களுடைய சந்தோஷத்தை அதிகரிக்குமாதலால் நான் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையோடிருந்தேன். அவர்கள் விலகிச் சென்று மறைந்து விட்டனர்.
மயான அமைதி
எந்தத் திசையில் போனால் சரியாக இருக்கும்? - தெரியாது!
எட்டு தீக்குச்சிகள்... ஒரு நாளுக்கு ஒன்று... அந்த வெளிச்சத்தில் அதிகபட்சமாக இருபது அடிதூரம் போகலாம் - அவ்வளவுதான்!
இந்தத் தனிமை ஒன்று போதும் உயிரை உறிஞ்ச....
...இருள் சூழ்ந்ததே... அம்மா! எங்கே நான் செல்வேன் - என் இல்லம் தூரத்தில் தெரியுதே...!



ஏழாவது தீக்குச்சி அணையப் போகிறது... எனக்கும் மரணத்துக்கும் இடையே இன்னும் ஒரே ஒரு தீக்குச்சிதான் மிச்சம்
''... ஜோதியாய் வந்தென்னைக் காத்திரு...
சூப்பர்...! தொடர்ந்து பாடு நண்பனே! உன் குரல்தான் எனக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்... நிறுத்தி விடாதே உன் பாட்டை... தொடர்ந்து பாடிக் கொண்டேயிரு!
யாரங்கே...? தெய்வ அசரீரியா? ஓ... நீ... பாக் - நீ எப்படி இங்கே -
இங்கே வேறு யார் வரமுடியும்? மற்றவர்களுக்கு தீவட்டி தேவைப்படும் - எனக்கு? அதெல்லாம் அர்த்தமற்ற சங்கதி!
அங்கேயே இரு... நான் உன்னிடம் வந்து சேருகிறேன்
கடைசி தீக்குச்சியும் தீர்ந்து போனது...
பாக்..
பாக்... நீ எங்கே இருக்கிறாய்?
பிரின்ஸிடம் இருந்த மாற்றம் பாக்கிடம் இல்லை... நிதானமாக அடி எடுத்து வைத்து முன்னேறி வந்தான்
உன் அருகே - தீக்குச்சி உரசலில் நெடிய்ய உணரக் கூடிய அண்மையில்!
பாக்... என்னை காப்பாற்ற வந்து சேர்ந்த தெய்வமே - நீ... நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?
பணத்துக்காக உன்னை கொலையாளிகளிடம் ஒப்படைத்த ஆசாமி எனக்கு வேண்டியவன்... ஸ்மித்தின் திட்டத்தை என்னிடம் சொன்னான்... பிறகு - நான் உன்னிடம் வந்து சேருவதில் கஷ்டமே இருக்கவில்லை!


பிரின்ஸ் வழி நெடுக தடுமாறினார் என்ற போதிலும் ஸ்மிட்த் கும்பலோடு உள்ளே வந்தபோது எடுத்துக் கொண்ட நேரத்தைவிட மிக குறைவான அவகாசத்திலேயே முடிந்து விட்டது அந்த திரும்பு பயணம்...
பாக்கிற்கு தன் வெற்றியில் ஏகப்பட்ட குஷி... வெளியேற அவன் தேர்ந்தெடுத்த வாசலும் நூதனமானது...
விடிகாலை மணி நான்கு... சுத்தமான இந்த இளம் காற்றுக்கு என்ன விலை கொடுத்தாலும் தகும்... இல்லையா - பிரின்ஸ்?
நூறு நிமிடங்களுக்குப் பின் - ஸ்மிட்த்தின் கொலைகாரக் கும்பல் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகி சரணடைந்தது...
அந்த வெற்றியை இரண்டு நாட்களுக்கு நாம் இங்கேதான் கொண்டாடினோம் - இல்லையா பாக்?
அப்போது உங்க கமிஷனரை நான் "போக்கர்" ஆட்டத்தில் ஜெயிச்சது கூட நினைவிருக்கு...
பார்வை இல்லைன்னாலும் கப்பலைக்கூட ஓட்டிட்டுப் போயிடுவே போலிருக்கே!



உன்னைப் பார்த்தா யாருக்குமே பொறாமையாத்தான் இருக்கும்... சொல்றனேன்னு தப்பா எடுத்துக்காதே - உன்னோட நெலைமையிலே நான் இருந்தா நாணயமா இருப்பேன்னு தோணலை... சுருக்கமா சொல்றதுன்னா, பார்வை இல்லாமலேயே இவ்வளவு தூரம் திறமையை வளர்த்துக்கிட்ட உனக்கு பழைய தொழில் காரணமா கை அரிப்பு எடுக்காம இருக்கிறது ஆச்சரியம்தான்!
பார்னே!
நியாயமான பேச்சு! அப்படியொரு எண்ணவோட்டம் மனசிலே எழாமலில்லை...
ஆனா... அப்படி நான் தீய வழியிலே போயிருந்தா தன் உயிரையே பணயம் வச்சு என்னை திசை திருப்பி இந்த அளவுக்கு மனுஷனா வாழ வச்சிருக்கிற பிரின்ஸுக்கு துரோகம் இழைச்சதா ஆயிரும்... அந்த பாவத்தைச் செய்ய எனக்கு சம்மதமில்லை...
?
நாணயம் மனுஷனுக்கு அவசியம்... அதனாலேதான் உன்னோட இடது பாக்கட் கிட்டே ஏன் கிழிஞ்சிருக்குன்னு நான் சுட்டிக் காட்டினப்போ நைஸா எடுத்துக்கிட்ட உன்னோட பொருட்களை இப்போ ....
... இதோ திருப்பிக் கொடுத்துடறேன்
சரி... பழசையே பேசிக்கிட்டிருந்தா எப்படி.... வாங்க இன்னிக்கு விருந்து உங்களுக்கு -என்னோட செலவிலே!

# வாசகர்
# ஹாட் - லைன்




அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

நான் தொடர்ந்து பல்லாண்டுகளாக காமிக்ஸ் புத்தகம் படித்து வருபவன். முத்து காமிக்ஸின் ஆரம்ப கால புத்தகங்களை நிறைய படித்துள்ளேன். நீங்கள் உங்கள் புத்தகங்களில் பல character - ஐ அறிமுகப்படுத்தினாலும் நான் எதிர்பார்க்கும் சில வரவில்லை. பிரஞ்ச் மற்றும் ஆங்கிலத்தில் உள்ள "Tin Tin மற்றும் ஆஸ்டிரிக்ஸ் & ஆபிலிக்ஸ் படக்கதைகளை யாராவது தமிழில் வெளியிடுவார்கள் என ஏங்கியதுண்டு. நீங்களாவது வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்த்தேன். நீங்கள் ஏன் மேற்கொண்ட கதைகளை வெளியிடக் கூடாது? ஒரு கதைக்கு ஒரு புத்தகம் என வெளியிடலாமே! பக்கங்கள் அதிகமானாலும் அதற்குரிய விலையை கொடுக்க காமிக்ஸ் பிரியர்கள் தயாராக இருக்கிறோம். எனவே தயவு செய்து **Tin Tin,** ஆஸ்டிரிக்ஸ் & ஆபிலிக்ஸ் கதைகளை வெளியிடவும்

தங்கள் உண்மையுள்ள,
**R. Rajkumar.**

*R. Rajkumar, 8C/14 Housing Board, Gundu Salai, Cuddalore - 607 001.*

## ஆசிரியர் பதில்

நல்லதொரு suggestion ஐ வாசக நண்பர் ராஜ்குமார் சொல்லியிருக்கிறார்!

பிரெஞ்சில் முதலில் வெளிவந்து - பின்னர் ஏராளமான உலக் மொழிகளில் - வெற்றிகரமாக வெளிவந்த / வந்து கொண்டிருக்கும் Tin Tin மற்றும் Asterix Obelix கதைத் தொடர்கள் மிகவும் தரமானவை! இரு கதைத் தொடர்களையும் நான் பல தடவை படித்து ரசித்திருக்கிறேன். சாகஸங்கள் பல செய்திடும் இளம் பத்திரிகை நிருபரான Tin Tin; அவனது குடிகார சகாவான கேப்டன் ஹேடாக்; ஸ்நோயி என்ற நாய் - ஆகியோரை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட Tin Tin கதைத் தொடர் நிச்சயம் தமிழில் வெற்றி பெறும் என்பது எனக்குத் தெரியும்!


ஆனால் - Tin Tin ஐ தமிழுக்கு கொண்டு வருவது அத்தனை சுலபமல்ல! சில வருடங்களுக்கு முன் நான் ஐரோப்பா சென்றிருந்த போது - Tin Tin நிறுவனத்தாரை சந்தித்து இது தொடர்பாகப் பேசினேன்! சர்வதேசப் புகழ் *Tin Tin* க்கு

தமிழில் உரிமைகளை வழங்கிட அவர்கள் கோரும் royalty தொகை மிக மிக அதிகமாக இருந்தது! அத்தனை விலை கொடுத்து கதைக்கான உரிமைகளை வாங்கி - பின்னர் வண்ணத்தில் அச்சிட்டு வெளியிடுவதென்றால் - நமது இதழின் விலையை தாறுமாறாக ஏற்ற வேண்டி வரும்! So - ''பின்னர் பார்த்துக் கொள்ளலாம்'' என்ற எண்ணத்தில் *Tin Tin* ஐ மறந்துவிட்டேன்! மீண்டும் ஐரோப்பா செல்ல நேரிடும் போது இது பற்றி இன்னொரு தடவை பேசிப் பார்க்கிறேன்! O. K. தானே?

Asterix & Obelix கதைகளைப் பொருத்த வரை மொழி மாற்றத்துக்கு உகந்தவையல்ல அவை! பல நூற்றாண்டுகளுக்கு முன் - மன்னர் ஜூலியஸ் சீஸரை எதிர்த்திட்ட ஒரு குக்கிராமத்தில் வசிக்கும் வீரர்களைப் பற்றிய இந்தக் கார்டூன் கதைகளை வெளியிடும் நிறுவனம் - எனக்கு மிகவும் பரிச்சயமானதே! எனினும் இந்தத் தொடர் நமது வாசகர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்காது என்ற காரணத்தால் இதனை வெளியிடவில்லை!

நமது "மினிலயன்" காமிக்ஸ் நின்றுவிட்ட பிறகு தரமான கார்டூன்களை வெளியிட முடியாமல் போய் வருகிறது! லயன் & முத்துவை முதலில் steady பண்ணிவிட்டு - மினி லயன் (or) திகில் (ஏதாவது ஒன்றை) எழுந்து வரச் செய்யலாம்!

அன்புடன்,
S. விஜயன்.




அடுத்த வெளியீடு!
லயன் காமிக்ஸ்
நள்ளிரவு வேட்டை!
லயன் தீபாவளி மலர்!
டெக்ஸ் வில்லர் சாகஸம்!
ரூ. 15/-